4. தகவல் கோரல்.

அரசிதழ் பதிவுபெரு அலுவலர் வேலைநிறுத்தம் பற்றி முதலமைச்சர் அளிக்கவிருக்கும் அறிக்கை குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, என். ஜி. ஓ. க்கள் பிரச்னை பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அமைச்சரவையைக் கூட்டுவதாகவும், எடுத்த முடிவுகளை இங்கு அறிக்கை வடிவிலே தருவதாகவும் இந்த அவையிலே அறிவிக்கப்பட்டு ஏடுகளிலேயும் செய்திகள் வந்துள்ளன. ஆனால் கேள்வி நேரம் முடிந்து மானியங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படவிருக்கின்ற இந்த நேரம் வரையில் அப்படிப்பட்ட அறிக்கை எதுவும் வரவில்லை. தாங்கள் என்ன பதில் அளிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். ஒன்றரை மணி வரையில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அறிக்கை சமர்ப்பிக்க விதி இருக்கிறது என்று கூறுவீர்கள். ஆனால் ஒரு மணி நேரமாக கேள்வி நேரத்தில் முதலமைச்சரவர்கள் இங்கு வந்து இருக்கவும் இல்லை. அறிக்கையை வெளியிடவும் இல்லை. எதிர்கட்சித் தலைவர்கள் ஒன்றரை மணி வரையில் இதேயிடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டுமென்றால் அது இயலாது என்பது தாங்கள் அறியாதது அல்ல. தாங்களேகூட துணைத் தலைவரையோ, மாற்றுத் தலைவரையோ உங்களுக்குப் பதிலாக உட்கார வைத்துவிட்டு அறைக்குப் போக வேண்டிய நிலையில் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை எங்களுக்கும் ஏற்படும். ஆகவே, எத்தனை மணிக்கு அறிவிப்பார்கள் என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டால் எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே இருப்பதற்கு வசயாக இருக்கும். அதையாவது அறிவிப்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எழுந்து கேட்பதற்கு முன் நானே சொல்வதாகத்தான் இருந்தேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வேறு ஏதாவது கேட்பார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இதைப்பற்றி நான் முன்பே கேட்டு வைத்திருக்கிறேன். காரணம், அவையிலே பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து உங்களுக்குப் பதில் தந்தாக வேண்டும். நேற்றிரவு நீண்ட நேரம் ஆனது. இப்பொழுது அறிக்கை தயாரிப்பதில் இருவரும் முனைந்திருப்பதால் இந்த மானியங்கள்

மீது வாக்கெடுப்பு முடிந்தவுடன் அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுது அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள், (குறுக்கீடு) ஒன்றரை மணிக்கு மேலே சமர்ப்பிப்பார்கள்.

திரு. மு. அரங்கநாதன் : நான் 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. ரா. உமாநாத் : சார், ஒன்றரை மணி என்றால் அறிக்கை கொடுத்தவுடனே நீங்கள் எழுந்து, இன்றையதினம் இதோடு இந்தக் கூட்டம் முடிந்தது என்று சொன்னால், நாங்கள் கிளாரி ஃபிகேஷன் கேட்க வேண்டுமென்றால் அதற்குச் சந்தர்ப்பம் வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஸ்டேட்மெண்டின்மேல் டிபேட் கிடையாது. சில விளக்கங்கள் கேட்டு பதில் சொல்வது தானே தவிர, அதற்குள்ளாக நான் முடித்து விடுவேன் என்றால் நான் அவ்வளவு தெரியாதவன் அல்ல. ஆனால் அதை விவாதப் பொருளாக ஆக்க முடியாது.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, சரியாக ஒன்றரை மணிக்கா, ஒன்றே முக்கால் மணிக்கா என்று சொல்லிவிட்டால் நாங்கள் இருப்பதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் சரியாக ஒன்றரை மணிக்கு முடிந்து விடுமேயானால் சரியாக ஒன்றரை மணிக்கே வரும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவரவர்களே, 'மக்கள் குரல்' மற்றும் சில பத்திரிகைகளில், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டு அந்த அறிக்கையை வைக்கப் போவதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரையும் அழைத்துக் கேட்டதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைச் செய்திகளை வைத்துக்கொண்டு அவையிலே கேள்வி கேட்பது சரியல்ல. அவையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதைக் கடைப்

1978 மார்ச் 11] [பேரவைத் தலைவர்]

பிடிப்பதுதான் என்னுடைய வேலை. பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இங்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பிரச்னையை விட்டுவிட்டு பத்திரிகையிலே வந்திருப்பதைக் கேட்பது நியாயம் இல்லை. அவையிலே நடப்பதை வைத்துத்தான் சொல்ல முடியும்.

திரு. ஏ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42-வது விதியின்கீழ் அனுமதிப்பதும் அனுமதிக்காததும் என் இஷ்டம். அதை இங்கே கேட்க முடியாது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். திரு. ரகுமான்கான் பேசியவை அத்தனையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

5. ஒத்திவைப்பு தீர்மானம்.

பேருந்துகளில் 'டெக்கோ-மீட்டர்' என்னும் கருவியைப் பொருத்த வேண்டுமென்ற அரசு உத்தரவினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 'டாகோகிராப்' என்னும் கருவியை எல்லா வாகனங்களிலும் பொருத்த வேண்டும் என்னும் அரசின் உத்தரவினால் ஏற்பட்டுள்ள "விளைவுகள் குறித்தும், என்ன விலை கொடுத்தாலும் அக்கருவி கிடைக்காமல் இருப்பது குறித்தும்" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. க. சுப்பு அவர்களும், திரு. துரைமுருகன் அவர்களும் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, எல்லா மோட்டார் வாகனங்களுக்கும் டாகோகிராப் என்ற கருவியைப் பொருத்த வேண்டுமென்று எற்கனவே எடுக்கப்பட்ட முடிவைத் தற்பொழுது அமுல்படுத்துகிற முறையிலே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனால் தகுதிச் சான்றிதழ் வாங்க வருகின்ற

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.